Find us on facebook/tamilmirror · Follow us on tamilmirror · epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 31, 2023

வியாழக்கிழமை ஒகஸ்ட் 31, 2023 | ஒளி: 09 கதிர் 074 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## 110 ஆவது ஜனன தினம்

'மலையகத்தின் தந்தை' என போற்றப்படுகின்ற பெருந்தலைவர் அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 110 ஆவது ஜனன தினம், கொழும்பிலும், மலையக பகுதிகளிலும் புதன்கிழமை (30) அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி P3

அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும்

# வலியுறுத்த வேண்டும்

## தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

 க. அகரன்



தமிழர் இறையாண்மையை அங்கீகரிப்பதற்காக எமது தமிழ்த் தலைவர்களும், மக்களும் அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் வலியுறுத்த வேண்டும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான புதன்கிழமை (30) வவுனியா முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், "சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இனப் போருக்கு முன்னும், பின்னும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ரூ.3 கோடி பெறுமதியான 3 கிலோ கிராம் ஐஸ் சிக்கியது



மன்னார் - மதவாச்சி பிரதான வீதியின் உயிலங்குளம் பகுதியில் வைத்து சுமார் 3 கிலோ 394 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் செவ்வாய்க்கிழமை (29) மாலை கைது செய்துள்ளனர்.

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றில் போதைப்பொருள் கடத்தி செல்வதாக விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

## காலி சிறை பக்டீரியா கொழும்புக்கு வந்தது

காலி சிறைச்சாலையில் இரண்டு கைதிகளை பலிகொண்ட 'மெனிங்கோகோகல்' எனும் பக்டீரியா தொற்றுக்குள்ளான நோயாளி கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நோயாளி ஜால பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடையவர் எனவும் அவர் இரத்மலானை சுகாதார வைத்திய பிரிவில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணிபுரிபவர் எனவும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## 2 தடைகளை மீறி பறந்தவர் மீண்டும் பறந்து வந்தார்

இலங்கையின் இரண்டு நீதிமன்றங்களினால் விமானப் பயணத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த நிலையில், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மீண்டும் அவரை இலங்கைக்குஅழைத்து வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 45 வயதான குறித்த நபருக்கு காங்கேசன்முறை மற்றும் மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களால் விமான பயணத் தடைகள் விதிக்கப்பட்டு, அவர் நாட்டை விட்டு வெளியேறுவது தடை செய்யப்பட்டிருந்தது.

இருந்த போதிலும், செவ்வாய்க்கிழமை (29) இரவு 11.45 மணியளவில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் மூலம் இந்தியாவின் மும்பைக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மண்வெட்டி கணையால் தாக்கியதில் ஒருவர் மரணம்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளஹா தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (29) இரவு ஏற்பட்ட கைகலப்பில் மண்வெட்டி தடியில் தாக்கப்பட்டதால் 3 பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய வீரசாமி பெஞ்சமின் சிகிச்சை பலனின்றி புதன்கிழமை (30) அதிகாலை மரணமடைந்தார்.

தாயுடன் ஏற்பட்ட முரண்பாடு முரண்பாட்டை தீர்க்கச் சென்ற வீட்டை சேர்ந்த வர் மண்வெட்டி கணையால் தாக்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

## 4 மாத குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து கொள்ளை

எம்.றொசாந்த்

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, நான்கு மாத குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து கொள்ளையடித்த கொள்ளை கும்பல், வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளையும் கொள்ளையடித்து அதில் தப்பி சென்றுள்ளது.

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய், மாசியாப்பிட்டி பகுதியில் உள்ள வலி.தென் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரின் வீட்டினுள் செவ்வாய்க்கிழமை (29) அத்துமீறி நுழைந்த நால்வர் கொண்ட முகமூடி கொள்ளை கும்பலே இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## காலநிலை மாற்றம் மேலும் மோசமாக்கும்



பலவீனமான மற்றும் போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் காலநிலை மாற்றம் மோதல்களை மோசமாக்கும் வாய்ப்பு உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக அதிக மரண விகிதங்கள் ஏற்படும் என்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வெகுவாகக் குறைக்கப்படும் என்றும் நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வங்கி ஒவ்வொரு வருடமும்"பலவீனமான மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகள்" என்று வகைப்படுத்தப்பட்ட நாடுகளின் பட்டியலைத் திருத்துகிறது, 2006ஆம் ஆண்டு முதல் வகைப்படுத்தப்பட்டு வரும் குறித்த பட்டியலில் ஆரம்பத்தில் 61 நாடுகள் இருந்த நிலையில், தற்போது 21 ஆப்பிரிக்க நாடுகள் உள்ளடங்கலாக 39 நாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோதுமை மா இறக்குமதி: உரிம நடைமுறை இரத்து

### வரி அதிகரிப்பு; விலை உயராது

கோதுமை மா இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர நடைமுறையை செவ்வாய்க்கிழமை (29) நள்ளிரவு முதல் இல்லாதொழிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், மாவுக்கான இறக்குமதி வரியை அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவிற்கான இறக்குமதி வரி 16 ரூபாவிலிருந்து 27 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மருமகளை கர்ப்பமாக்கி மாமா மாட்டினார்

ரஞ்சித் ராஜபக்ஷ

தன்னுடைய சகோதரியின் மகளான 16 வயதான மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி, அவளை கர்ப்பமாக்கினார் என்றக் குற்றச்சாட்டின் பேரில், 24 வயதான மாமனார் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம், திம்புள்ளை-பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொட்டகலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விருந்தினராக வந்திருந்த மாமா, அந்த யுவதியின் பெற்றோர் இருவரும் கொட்டகலை பிரதேசத்தில் உள்ள விலங்கு பண்ணைக்கு வேலைக்குச் சென்றிருந்த போதே, இன்றைக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வீட்டிலேயே வைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

தன்னுடைய மகளுக்கு தொடர்ச்சியாக வயிற்றுவலி ஏற்பட்டது தொடர்பில், வைத்தியரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே, மகள் கர்ப்பமாக இருக்கின்ற விடயம் தெரியவந்தது.

இதனையடுத்து, அந்த பெண்ணின் தாய், திம்புள்ளை-பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர், நாவலப்பிட்டியவை வசிப்பிடமாகக் கொண்ட மாமா கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவ

தொடர்ச்சி P2

மக்களுக்காக குரல் எழுப்புவதை

## ஜனாதிபதியாலும் தடுக்க முடியாது



மக்கள் பணத்தால் நிர்வகிக்கப்படும் மக்கள் பிரதிநிதியாக, மக்களுக்காக குரல் எழுப்புவது தனது கடமை என்றும், அதனை தடுக்க ஜனாதிபதிக்கோ அல்லது எந்தவொரு நபருக்கோ அல்லது தரப்புக்கோ முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காணி பிரச்சினையை தீர்த்தால் ரணிலுக்கே வாக்கு



தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகியும் இதுவரை மக்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

காணிப்பிரச்சினையை தீர்த்து காணி உறுதிப்பத்திரம் வழங்கினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்த பெருந்தோட்ட மக்களின் முழு ஆதரவையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டி நகரில் இடம்பெற்ற மலையகம் 200 என்ற நூல் வெளியீட்டு விழாவில் அதிதியாக கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "பெருந்தோட்ட மக்கள் இந்த நாட்டிற்கு வந்து 200 வருடங்கள்

தொடர்ச்சி P2

ஏனைய நாடுகளுக்கு

## இலங்கை இனிமேலும் சுமையாகக் கூடாது



இலங்கை இனிமேலும் ஏனைய நாடுகளுக்கு சுமையாக இருக்கக் கூடாது என்றும் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் செயற்பட்டமை போன்று, உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி ஒரு நாடாக நாமும் தனித்து முன்னேற முயற்சிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பாதையை பின்பற்றி, போட்டித்தன்மைமிக்க, புதிய சந்தை வாய்ப்புகளையும், வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்கத் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

"இலங்கையின் நிலையான அபிவிருத்தி நோக்குநிலை" என்ற தலைப்பில் அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்ற நிபுணர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் நாம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இங்கு குறிப்பிடப்பட்டது. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ள கலந்துரையாடலில் நானும் பங்கேற்கிறேன்.

நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நாம் இப்போது அடைந்து வருவதோடு, அதன் பிரதிபலன்களும் பாராட்டுக்குரியவை.

ஐரோப்பாவின் பொருளாதாரம் இன்றளவிலும் சரிவை எதிர்கொள்கிறது. மறுமுனையில் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டிருந்தாலும், அதிர்ஷ்டவசமாக அமெரிக்கா இருந்த நிலையை விடவும் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டுவருகிறது. சீனா இன்னும் மீண்டு வரவில்லை. எனவே, உலகப் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதுடன், அதனால் பெரும் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வலியுறுத்த வேண்டும்

எனவே சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதன் மூலமே நாம் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை பற்றிய உண்மையினை வெளிப்படுத்த முடியும்.

அத்துடன் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, கணிசமான எண்ணிக்கையிலான தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதற்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இலங்கை நம்பியுள்ளது. இது தமிழ் சமூகத்திற்கு ஆழ்ந்த அச்சத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது.இதுவே பரந்தளவிலான மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கிறது.

போரின் போதும் அதற்குப் பின்னரும் துணை இராணுவக் குழு ஒன்று வன்னியில் உள்ள தமிழ் அகதிகள் முகாம்களில் இருந்து இளைஞர்கள் மற்றும் சிறுமிகளை தேர்ந்தெடுத்தது. அந்த துணை இராணுவப் படைத் தலைவர் இப்போது எம். பி.யாக இருப்பது எமக்கு வருத்தம் அளிக்கிறது.

இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்ட பல தமிழ் குழந்தைகள் அருகில் உள்ள புத்த மடங்களில் பயிற்சி பெற்று இளம் பௌத்தபிக்குகளாய் ஆகியுள்ளனர். அவர்கள் சிங்களக் குடும்பங்களால் தத்தெடுக்கப்பட்டு இப்போது சிங்களவர்களாக வாழ்கிறார்கள்.

காணாமல் போன 10 பேரை கண்டுபிடித்ததாக இலங்கை அதிகாரிகள் கடந்தவாரம் எங்களுக்கு அறிவித்தனர். அவர்களின் அடையாளங்கள் பற்றிய தகவல்கள் எங்களிடம் இல்லை. எனினும், காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகள் உண்மையில் பாதுகாப்பாகவும் உயிருடன் இருப்பதாகவும் நாங்கள் கூறிய விடயம் இதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

தமிழர் இறையாண்மையை அங்கீகரிப்பதற்காக எமது தமிழ்த் தலைவர்களும், மக்களும் அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் வலியுறுத்த வேண்டும். இது நம் குழந்தைகளை தேடுவதற்கு உதவும்.

தமிழ் இனத்துக்கான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கின் பங்களிப்பை நாம் பாராட்டுகின்றோம்.

அவர் சர்வதேச இராஜதந்திரிகளுடன் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கான உதவியை எமக்கு செய்யவேண்டும். அங்கு தமிழர் இறையாண்மைக்கான எங்கள் விருப்பத்தை திறம்பட வெளிப்படுத்த முடியும்" என்றனர்.

# ரூ.3 கோடி பெறுமதியான 3 கிலோ கிராம் ஐஸ் சிக்கியது

அதற்கமைய உயிலங்குளம் பகுதியில் வைத்து குறித்த பஸ், விசேட அதிரடிப்படையினரால் நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது மன்னார் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரை போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரும் அவரிடமிருந்து மீட்கப்பட்ட 3 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான ஐஸ் போதைப்பொருளும் உயிலங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மண்வெட்டி கணையால் தாக்கியதில் ஒருவர் மரணம்

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தாக்குதலை நடத்தினார் என்றக் குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டுவந்த நபர், தலைமறைவாகி இருந்த நிலையில் லிந்துலை-நாகசேனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

■ துவாரகஷான், எஸ்.கௌசல்யா, ரஞ்சித் ராஜபக்ஷ, பி.கேதீஸ், சுஜிதா. எஸ். கணேசன், சுஜிதா

# காலி சிறை பக்டீரியா கொழும்புக்கு வந்தது

குறித்த நபர் காய்ச்சல் காரணமாக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இரத்மலானை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் பணிபுரிந்த நிறுவனத்தில் பணிப்புரியும் 30 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் வழங்கப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# 2 தடைகளை மீறி பறந்தவர் மீண்டும் பறந்து வந்தார்

இந்த விமானத்துக்குச் செல்வதற்காக, விமான நிலைய குடியகல்வு கருமபீடங்களில் அதிகாரிகள் இல்லாத கருமபீடத்தின் ஊடாக குறித்த நபர் நுழைந்துள்ளார்.

அவரது செயலை அவதானித்த, குடியகல்வு செய்ய வந்த அவுஸ்திரேலிய பெண்ணொருவர் குடிவரவு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அதன்படி, குடிவரவு அதிகாரிகள் குறித்த பெண்ணுடன் இந்த நபரைக் கண்டுபிடிக்கச் சென்ற போதும் அவர் சம்பந்தப்பட்ட விமானத்துக்கு ஏற்கெனவே சென்றுவிட்டார்.

பின்னர், இந்த அதிகாரிகள் தலைமை குடியேற்ற அதிகாரியிடம் தகவல் தெரிவித்து, விமான நிலைய பாதுகாப்பு கமெரா அமைப்பைப் பார்த்து, அவரது விமான உரிமம் மற்றும் விமான டிக்கெட்டை கணினி அமைப்பு மூலம் பெற்று சரிபார்த்தபோது, அவருக்கு எதிராக இரண்டு நீதிமன்றங்களால் விமான தடை விதிக்கப்பட்டிருந்தமை கண்டுப்பிடிக்கப்பட்டது.

அதன்படி, கட்டுநாயக்க விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்கு உடனடியாகத் தொடர்பு கொண்டு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது, அதற்குள் இந்த விமானம் இலங்கை வான்பரப்பிலிருந்து இந்திய வான் எல்லைக்குள் நுழைந்து விட்டது.

பின்னர், கட்டுநாயக்க விமான நிலைய இலங்கை விமான நடவடிக்கை முகாமையாளர் இந்த விமானத்தின் பிரதான விமானி, இந்தியாவின் மும்பையில் உள்ள விமான நிலைய செயல்பாட்டு முகாமையாளர் மற்றும் நாட்டின் விமான நடவடிக்கை கட்டுப்பாட்டு அறைக்கு அறிவித்தார்.

அதன்படி, இந்த பயணியை இந்தியாவின் மும்பையிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமானத்தின் ஊடாக அழைத்து வந்து கட்டுநாயக்க குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த பயணி விமான நிலைய குடியகல்வு கருமபீடத்துக்கு வரவில்லை என்றாலும், அவரது கடவுச்சீட்டில் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு முத்திரை குத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பயணி மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 4 மாத குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து கொள்ளை

வீட்டினுள் நுழைந்தவர்கள் 4 மாத குழந்தையை தூக்கி அதன் கழுத்து கத்தியை வைத்து, வீட்டில் இருந்தவர்களை மிரட்டி , 11 பவுண் தங்க நகைகள், பெறுமதியான 3 கையடக்க தொலைபேசிகள் , 2 இலட்ச ரூபாய் பணம் மற்றும் வங்கி புத்தகம் என்பவற்றை கொள்ளையடித்துள்ளனர்.

கொள்ளை கும்பல் தப்பி செல்லும் போது, "பொலிஸாருக்கு அறிவித்தால் , பின் விளைவுகளை சந்திக்க நேரிடும்" என வீட்டாரை மிரட்டி விட்டு, வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிளையும் கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மருமகளை கர்ப்பமாக்கிய மாமா மாட்டினார்

தற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், பாதிக்கப்பட்ட பெண், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றனர்.

# ஜனாதிபதியாலும் தடுக்க முடியாது

கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் துறையில் பல ஆண்டுகளாக அநீதி இழைக்கப்பட்ட அதிகாரிகள் குழுவுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கும் போது தேவையற்ற கேள்விகளை கேட்டு பாராளுமன்றத்தில் நேரத்தையும் பணத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் வீணடிப்பதாக மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் குழு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக இரு அரச பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

அவ்வாறானதொரு கருத்து வெளியிடப்பட்டிருந்தால் அது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகவும், மொட்டு எம்.பிக்களும் தமது கடமையை சரியாகச் செய்வதை ஏற்றுக்கொண்டமையே மகிழ்ச்சிக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டார்.

மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மக்கள் பிரச்சினைகளை சட்டவாக்கத்துறையில் முன்வைத்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதையே தாம் செய்வதாக குறிப்பிட்டார்.

மக்களின் பணத்தில் சம்பளம் மற்றும் சேவை வசதிகள் மற்றும் பல்வேறு சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களைப் பெறும் மக்கள் பிரதிநிதிகளின் பணி இதுவாகவே இருக்க வேண்டும் என்றும், தாம் தனிப்பட்ட கேள்விகளைக் கேட்கவில்லை என்றும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தான் எப்போதும் முன்வைப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் பணத்தால் நிர்வகிக்கப்படும் மக்கள் பிரதிநிதியாக, மக்களுக்காக குரல் எழுப்புவது தனது கடமை என்றும், அதனை தடுக்க ஜனாதிபதிக்கோ அல்லது எந்தவொரு நபருக்கோ அல்லது தரப்புக்கோ முடியாது எனவும், அதனை நிறுத்த இடமளிக்கப் போவதில்லை என்றார்.

குறித்த சந்திப்பில், திட்டமிடல் துறையில் உயர் தரம் 2 (2) வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது சேவை சாசனத்தை மீறி,வர்த்தமானி வெளியிட்டமை குறித்து எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

ஆட்சேர்ப்புச் செய்யும் போது வர்த்தமானியில் பெயர் இல்லாத குறிப்பிட்ட பிரிவினருக்கு நியமனம் வழங்கி, வேறு பிரிவினருக்கு நியமனம் வழங்காமல் விட்டும் ஆட்சேர்ப்பில் இடம் பெற்ற அநீதிகள் குறித்தும் தெரியப்படுத்தினர்.

இந்த அநீதி தொடர்பில் விரைவில் பாராளுமன்றத்தில் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

# கோதுமை மா இறக்குமதி: உரிம நடைமுறை இரத்து

எனினும், கோதுமை மாவின் விலையில் மாற்றம் ஏற்படாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதன்மூலம் கோதுமை மா இறக்குமதிக்கான ஏகபோக உரிமையை இல்லாதொழித்து போட்டிச் சந்தை முறையின் ஊடாக விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள இரண்டு பெரிய நிறுவனங்கள் கோதுமை மாவை இறக்குமதி செய்து பாரிய இலாபம் ஈட்டுவதாகவும் அதனால் இறக்குமதி அனுமதிப்பத்திர நடைமுறையை இரத்து செய்து பழைய முறைமை அமலாக வேண்டும் என்று ஏனைய இறக்குமதியாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# இலங்கை இனிமேலும் சுமையாகக் கூடாது

அவ்வாறென்றால், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாம் எவ்வாறு நிதியைப் பெற்றுக்கொள்வது? மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்கவும் உலகளாவிய நிதிக் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நிதி நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அந்த இலக்குகளை அடைவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

2019 இல் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய, மொத்தத் தேசிய உற்பத்தியில் 9% சதவீதத்தை மாத்திரம் வைத்திருப்பதே எமது தேவையாக இருந்தது. ஆனால் தற்போது, இந்தப் பின்னணியிலும், காலநிலை மாற்ற இலக்குகளுக்காக நாம் நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது.

இலங்கை எதிர்கொண்ட கடன் நெருக்கடியின் விளைவாக, இந்நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க நாங்கள் எதிர்பார்ப்பதோடு, அதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து வருகிறோம்.

அதற்காக தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் பின்பற்றிய பாதை குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளதோடு, இதன்போது உயர் போட்டித்தன்மையுடைய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக எம்மால் மாற முடியும்.

நாம் தொடர்ந்தும் முன்பு இருந்தது போன்று சிறிய பொருளாதாரமாக செயல்பட முடியாது. நாம் நமது பொருளாதாரத்தை விஸ்தரிக்க வேண்டும். இதற்காக புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், இதற்குத் தேவையான வெளிநாட்டு முதலீடு மற்றும் மூலதனத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நமது நாடு இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. எனவே, எமக்கு பொருளாதார வளர்ச்சியை உருவாக்க பல வாய்ப்புகள் உள்ளன" என்றார்.

# காணி பிரச்சினையை தீர்த்தால் ரணிலுக்கே வாக்கு

கடந்துள்ள நிலையிலும் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவோ, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவோ இந்த நாட்டில் எந்த ஆட்சியாளர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை" என்று சுட்டிக்காட்டினார்.

# 29 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கற்கள் சிக்கின

■ டி.கே.ஜி கபில

29 கோடியே 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கற்ககளை சுங்க அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு எடுத்துச் செல்ல முயன்றார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், பெண்ணொருவர் புதன்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, ஒருகொடவத்த பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 30 வயதான வர்த்தகரான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்திய விமானச் சேவைக்கு சொந்தமான ஏ.ஐ-274 என்ற இலக்கத்தை கொண்ட விமானத்தின் ஊடாக புதன்கிழமை (30) அதிகாலை 3.15 மணியளவில் இந்தியா-சென்னைக்கு புறப்பட்டுச் சென்ற விமானத்தில் பயணிப்பதற்காவே அப்பெண் விமான நிலையத்துக்கு வருகைதந்துள்ளார்.

அப்பெண் உடுத்தியிருந்த ஆடைக்குள் 2 கிலோ 311 கிராம் 75 மில்லிகாரம் நிறையுடைய மாணிக்கக்கற்கள் தொகையை மறைத்துவைத்து எடுத்துச் செல்ல முயன்றபோதே கைது செய்யப்பட்டார்.



# இரு தடுப்பூசிகள் நாட்டில் இல்லை

மஞ்சள் காய்ச்சல் மற்றும் மூளைக்காய்ச்சல் ஆகியவற்றுக்கான தடுப்பூசிகள் நாட்டில் இல்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க பிராந்தியத்தில் தொழில் நிமித்தம் செல்வோருக்கு மஞ்சள் காய்ச்சலுக்கான தடுப்பூசிகளும் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு பயணிப்போருக்கு மூளைக்காய்ச்சலுக்கான தடுப்பூசிகளும் ஏற்றப்படுகின்றன.

குறித்த தடுப்பூசிகள் இல்லாமையால், உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து அந்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

தடுப்பூசிகளுக்காக ஒப்பந்தம் செய்துகொண்ட விநியோகஸ்தரால் சரியான முறையில் தடுப்பூசிகளை வழங்கப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க, குறித்த விநியோகஸ்தரிடமிருந்து விரைவில் தடுப்பூசியை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரங்களுக்குள் கிடைக்கப்பெறும் என்றும் தெரியவருகிறது.

## சாதாரண சிங்களக் குடிமகன்

# எம்மோடு வாழ்வதை எதிர்க்கவில்லை

■ புகஜிந்தன்

ஒரு சாதாரண சிங்கள குடிமகன் தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ்வதற்கு விரும்பி வந்து வடக்கு, கிழக்கிலே காணி வாங்கி வீடு கட்டுவதை நாங்கள் எதிர்க்கவில்லை என்றும் அந்த உரிமை அனைவருக்கும் இருக்கிறது என்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுவாஸ் தெரிவித்தார்.

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான எங்களது போராட்டம் தொடர்ந்து கொண்டுள்ளது. நாங்கள் சிங்கள மக்களுடைய காணிகளை ஆக்கிரமிக்கவும் இல்லை. அவர்களுடைய வழிபாட்டு இடங்களை தகர்க்கவும் இல்லை. அவர்களுடைய வழிபாட்டு இடங்களை தகர்த்துவிட்டு அங்கு எங்களுடைய வழிபாட்டு இடங்களை அமைக்கவும் இல்லை. தையிட்டி எங்களுடைய பூர்வீக பிரதேசம். இது சைவத்தமிழ் மக்களுக்கு சொந்தமான காணி. இந்த காணிக்குள் வந்து சட்டவிரோதமான விகாரையை அமைத்திருக்கின்ற படியால்தான் நாங்கள் இங்கே போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இங்கே தமிழ் மக்களுடைய பூர்வீக காணிக்குள் வந்து சட்டவிரோதமான விகாரையை அமைத்திருப்பதை தான் நாங்கள் எதிர்க்கின்றோம். இங்கே சைவக் கோயில் இருந்ததற்கான வரலாறு உள்ளது.

திட்டமிட்ட வகையில் இன அழிப்பு செய்கின்ற நோக்கோடு, தங்களுடைய மக்களுடைய அடையாளத்தை தகர்ப்பதற்காக வருகின்ற சிங்களக் குடியேற்றங்களையும் எதிர்ப்போம். அந்த நோக்கோடு வருகின்ற விகாரைகளையும் எதிர்ப்போம்.

# "சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்"

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான ஒகஸ்ட் 30 ஆம் திகதி, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கு, கிழக்கில் பல இடங்களில் பேரணியை முன்னெடுத்தனர். வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ் மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தில் உறவுகளை நினைவுறுத்தி மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது.

எஸ்.நிதர்ஷன், பேரின்பராஜா சபேஷ், எம் எஸ் எம் நூர்தீன், வா.கிருஷ்ணா





























### அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின்

## 110 ஆவது ஜனன தினம்







'மலையகத்தின் தந்தை' என போற்றப்படுகின்ற பெருந்தலைவர் அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 110 ஆவது ஜனன தினம் புதன்கிழமை (30) தலைநகர் கொழும்பிலும், மலையக பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

பழைய பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு இ.தொ.காவின் பிரதிநிதிகள் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் உட்பட கட்சி பிரமுகர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் இதன்போது கலந்துக் கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வின் பின்னர் இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனின் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அத்துடன், கொட்டகலையில் உள்ள சி.எல்.எப் வளாகம் உட்பட ஏனைய பகுதிகளிலும் ஜனன தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

## மின்சாரம் துண்டிப்பால் 350 குடும்பங்கள் பரிதவிப்பு

**செ.தி.பெருமாள்**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீப் பிரிவில் உள்ள குடிநீர் விநியோக திட்டத்திற்கு வழங்க பட்டிருந்த மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக அந்த பிரிவில் உள்ள 350 குடும்பங்கள் குடி நீர் இன்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தோட்டத்தில் உள்ள குடியிருப்பு



தொழிலாளர்கள், மின் கட்டணத்தை செலுத்திய போதும், அத் தோட்டத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மின்கட்டணத்தை செலுத்தவில்லை. இதனால், 2 இலட்சத்து 50,000 ரூபாய் நிலுவையில் உள்ளது. இதனால், மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகிகள் பாவிக்கும் தண்ணீர் கட்டணத்தை தோட்ட நிர்வாகம் கட்ட வேண்டும் எனவும் அப்பணம் கட்டினால் மட்டுமே மீளவும் குடி நீரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இலங்கை மின்சார சபையினர் கூறுகின்றனர்.

## பருத்தித்துறை பற்றி எரிந்த வாகனம்

**எஸ் தில்லைநாதன்**




யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப்பகுதியில், பட்டா வாகனம் புதன்கிழமை (30) நண்பகல் தீப்பிடித்ததில் எரிந்து நாசமாகியுள்ளது.

மின் கசிவினால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பொருட்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீன்லொறி புரண்டதில் இருவர் படுகாயம்

**எப்.முபாரக்**



திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதன்கிழமை (30)காலை மீன் ஏற்றி வந்த லொறி நடுவீதியில் புரண்டு விபத்துக்கு உள்ளானதில், வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்து கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 48 மற்றும் 30 வயதுடைய இருவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நிலாவெளி பிரதேசத்திலிருந்து கந்தளாயிக்கு மீன் ஏற்றி வந்த போது 87 ஆம் கட்டைப் பகுதி வளைவில் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ரயிலில் மோதிய வான்: பெண் படுகாயம்

வாதுவ, ரத்நாயக்க வீதிக்கு அருகில் புகையிரத கடவையின் ஊடாக பயணித்த வேன் ஒன்று புகையிரதத்தில் மோதியதில் வானில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்து பாணந்துறை ஆரம்ப வைத்தியசாலையில் புதன்கிழமை (30) அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்திற்கு உள்ளான இளம் தம்பதிகள் விடுமுறையை கழிப்பதற்காக அப்பகுதியில் உள்ள உல்லாச விடுதிக்கு சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலியில் இருந்து மருதானை நோக்கி பயணித்த புகையிரதத்துடன் வான் மோதி விபத்துக்குள்ளானதாகவும், விபத்தில் சிக்கிய பெண்ணை பிரதேசவாசிகள் காப்பாற்ற முயற்சித்ததாகவும் வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் சிக்குண்டவர்கள் கொட்டிகாவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாதுவ பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் சாமேந்திர, பொலிஸ் பரிசோதகர் கயான் கஹடபிட்டிய, சார்ஜன்ட் உபுல், போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரின் பணிப்புரைக்கு அமைய பொலிஸார் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உடமைகளை அடகு வைத்து ஜீவிக்கும் சாமான்யர்கள்

தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீண்டெழுந்து விடுவோமென எண்ணுவோரின் மனங்களில் மண்ணை வாரி இறைத்தாற்போல, பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் எகிறிக்கொண்டே போகின்றன.

கிடைப்பதை வைத்து இருப்பதைக் கொண்டு ஜீவிதம் நடத்தலாம் என்றெண்ணியோரின் வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில், மீண்டும், மீண்டும் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன. விலைகள் குறைக்கப்பட்ட பொருட்களை சந்தையில் காணக் கிடைப்பதில்லை.

விலை குறைக்கப்பட்டு பொருட்களை சதொசவில் வாங்கிக் கொள்ளலாம் என அரசாங்கம் தம்பட்டம் அடித்தாலும், அங்கு இறாக்கைகள் பல வெறிச்சோடியே கிடக்கின்றன. பல கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றாலும் வெறுங்கையுடன் திரும்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே சாதாரண மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற வறட்சியான காலநிலையால், நெல் வயல்கள் கருகிவிட்டன. அடுத்த போகம் மட்டுமன்றி, அடுத்தடுத்த போகங்களில் போதியளவில் நெல் கிடைக்காமல் போகலாம். இது மற்றுமொரு நெருக்கடியை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். ஆகையால், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான அதிரடி நடவடிக்கையை உரிய தரப்பினர் எடுக்கவேண்டும்.

சந்தைகளில் தற்போதைக்கு ஒரு சில வகைகளைச் சேர்ந்த அரிசியைத் தவிர, ஏனைய அரிசிகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. இதேவேளை, விலையும் வானத்தை முட்டும் அளவுக்கு உள்ளது. அரிசிக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுமாயின், அரிசி பஞ்சம் கூட ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதனிடையே, நாளாந்தம் ஜீவிதம் நடத்துவதற்காகவும் பொருளாதார நெருக்கடியாலும் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக, 65 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மக்கள் தங்களுடைய தங்க நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை அடகு வைத்துள்ளனர் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வங்கிகளிலும் கிராமங்களில் முதலாளிகள் மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்போரிடமும் சொத்துக்களை அடகு வைத்து பணத்தை பெற்றுள்ளனர். அவற்றை குறுகிய காலத்துக்குள் திருப்பிக்கொள்வதற்கு போதையளவில் பணவசதிகள் அவ்வாறானவர்களிடம் இல்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

வறட்சியால் பயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. முதலீடு செய்த தொகையில் அரைவாசியை ஏனும் மீள பெற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சிக்குப் பின்னர், கடும் மழை பெய்யுமாயின், வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இதனாலும் சாமான்ய மக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

வேலைக்குச் செல்வதற்கு பலரும் காத்திருந்தாலும், வேலைவாய்ப்புகள் முறையாக கிடைப்பதில்லை. வெளிநாடுகளுக்கு வேலைக்காகச் சென்றிருப்போர் அனுப்பும் பணத்தில் சில சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் எதிர்காலத்தை பற்றி சிந்திப்பதில்லை.

இருக்கும் சொத்துக்களை எல்லாம் அடகு வைத்துவிட்டால், எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும். ஆகையால், நாளொன்றுக்காக உழைப்பதை கடினப்படுத்திக் கொண்டு, ஓரளவுக்கேனும் செலவைக் கட்டுப்படுத்திக் கொண்டால் மட்டுமே, இருப்பதை காப்பாற்றிக்கொள்ள முடியுமென வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும் வெற்றிலையை வாயில் சப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள், மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அரு வருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள். ஷ

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இனவாதத்தால் நாட்டை நாசமாக்கும் சக்திகள்!



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டின் முன்னால் கடந்த வாரம் இரண்டு தடவைகள் பௌத்த சிங்கள அடிப்படைவாதக் குழுக்கள் போராட்டங்களை நடத்தின. வடக்கு கிழக்கில் சட்டத்துக்கு புறம்பாகவும், தனியார் காணிகளில் அத்துமீறியும் அமைக்கப்படும் பௌத்த ஆக்கிரமிப்பு சின்னங்கள், விகாரைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பத்தி எழுதப்படும் போதும் யாழ்ப்பாணம் தையிட்டியில் தனியார் காணிகளில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. இந்தப் போராட்டங்களை பௌத்த சிங்களத்துக்கு எதிரானது என்று சித்தரித்துக் கொண்டு தென் இலங்கை அடிப்படைவாதிகள் நாள்தோறும் இனவாதத்தை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிகழ்ச்சி நிரலின் பகுதியாகவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள இல்லத்தின் முன்னாலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை என்கிற நாடு சிங்களவர்களுக்கு மட்டும் உரியது என்கிற இனவாதச் சிந்தனையை தென் இலங்கை தொடர்ச்சியாக பரப்பி வந்திருக்கின்றது. நாட்டிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் வந்தேறு குடிகள் என்பது மாதிரியான தொடர் பரப்புரை எந்தவித வெட்கமும் இன்றி முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த சிங்கள வரலாற்று நூல்களில் ஒன்றாக கொள்ளப்படும் மகாவம்சமும் கூட சிங்களவர்களின் தோற்றுவாயான விஜயன், இந்தியாவில் இருந்து துரத்தப்பட்ட இளவரசன் என்கிறது. விஜயனும் அவரது 700 தோழர்களும் இலங்கை வந்த பின்னர், தென் இந்தியாவில் இருந்து பெண்களை அழைத்து மணம் முடித்ததாக மகாவம்சம் கூறுகிறது. இதனை, பள்ளிப்பாடத்தில் வரலாறாக புதிய தலைமுறைகளிடம்அரசு புகட்டியும் வருகின்றது. இதுதான் உண்மையான வரலாறு என்று தென் இலங்கையின் அடிப்படைவாதிகள் நம்பினால், இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கரும் நாகரும் தவிர்ந்த அனைவரும் இந்த நாட்டின் வந்தேறுகுடிகள் என்று கொள்ளப்பட வேண்டியவர்கள். அப்படிப்பட்ட நிலையில், தமிழ், முஸ்லிம் மக்களை வந்தேறுகுடிகள் என்று தொடர்ச்சியாக கூறும் வாதம் எந்த அடிப்படையில் வருகின்றது. இந்தியாவில் இருந்து துரத்தப்பட்ட இளவரசனும், அவனது தோழர்களும் தென் இந்தியாவில் இருந்து வரழைக்கப்பட்ட பெண்களின் வழியும் தழைத்த ஓரினம் எப்படி இந்த நாட்டின் ஆதிக்குடிகளாக கருதப்படக் கூடியவர்கள் என்ற வாதத்தை எப்படி புறந்தள்ள முடியும்? தமிழ், முஸ்லிம் மக்களை வந்தோறுகுடிகள் என்று கூறும் தென் இலங்கையின் அடிப்படைவாதிகள், இனவாதிகளிடம் மனோ கணேசன் மேற்கண்ட கேள்விகளை தொலைக்காட்சி விவாதங்களிலேயே எழுப்பியதைப் பார்த்திருக்கிறேன். இந்தக் கேள்வியைத் தவிர்ப்பதற்காகத்தான், தென் இலங்கையின் அடிப்படைவாத சக்திகள், இராணவனை இயக்கர் குல மன்னன் என்றும், அவன் சிங்களவன் என்றும் கூறத் தொடங்கியிருக்கின்றன. அண்மைய காலத்தில் தொடர்ச்சியாக இனவாத சிந்தனைளை விதைத்து வரும் சரத் வீரசேகர, சிவபக்தனான புராணங்களில் கூறப்படும் இராணவனை சிங்களவன் என்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

புராணங்களும், புனைவுக் கதைகளும் மனித வரலாறு பூராவும் கலந்திருக்கின்றன. பத்துத்தலை கொண்ட இராவணன் தொடங்கி, மலைகளை தூக்கி சுமக்கும் அனுமான் என்கிற குரங்கு வரை உலகம் பூராவும் ஆசாத்தியமான கதாபாத்திரங்களைக் கொண்ட புனைவுகள் இருக்கின்றன. எப்போதுமே புனைவுகளும் வரலாறும் ஒன்றாக வேண்டியமில்லை. வரலாறு என்பது இருந்தததை இருந்த மாதிரியே கூறுவது. புனைவுகளுக்கு எந்தவித எல்லையும் இல்லை. ஒரு கதாபாத்திரத்தை எப்படி வேண்டுமானாலும் உருவாக்கலாம். அது படைப்பாளிக்குரிய சுதந்திரம். ஆனால், இனவாதிகள், மதவாதிகள் தொடங்கி அடிப்படைவாதிகள் இந்தப் புனைவுகள் எல்லாவற்றையும் உண்மையான வரலாறாக காட்டி மக்களை காலங்காலமாக குழப்பி வந்திருக்கிறார்கள். இந்தக் குழப்பங்களின் வழியாக, அவர்கள் அதிகாரத்தையும் ஆட்சியையும் குறிவைத்து நகர்ந்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சிதான் இனவாதம், மதவாதத்தின் வழியாக தென் இலங்கையில் பரப்பப்படுகின்றன. இந்த நாடு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், ஏனைய சிறுபான்மையினருக்கும் உரியது. இங்கு தனித்த உரிமை என்ற ஒன்றை யாரும் வெளிப்படுத்த முடியாது. அதற்கான வரலாற்று உரிமை யாருக்கும் இல்லை. அப்படி தனித்து உரிமை கொண்டாடும் தரப்பு, பொய்யான வழிகளில் வரலாற்று திரிப்புக்களை செய்து மக்களை ஏமாளிகள் ஆக்க வேண்டும். இப்போது, வடக்கு கிழக்கில் பௌத்த சின்னங்களை அமைக்கும் முயற்சிகள் அதன்போக்கில் முன்னெடுக்கப்படும் ஒன்றுதான். வடக்கில் தமிழ்ப் பௌத்தம் கோலொச்சிய காலமொன்று இருந்தது. அதற்கான வரலாற்று சான்றுகள் கந்தரோடை தொடங்கி, குருந்தூர் மலை வரை காணப்படுகின்றன. அதனை, அதன் உண்மைத் தன்மையை பேணுவதோடு காப்பதுதான், வரலாற்றினை காக்கும் முறை. மாறாக, அங்கு தேரவாத சிங்கள பௌத்த அடையாளங்களை திணித்து, தமிழ்ப் பௌத்தத்தின் வரலாற்றினை அழிப்பது அல்ல. இப்போது,தொல்லியல் திணைக்களமும், அடிப்படைவாத பௌத்த பிக்குகள் சிலரும், அரச கட்டமைப்பும், சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்ற வாக்குக்காக இனவாதம் பேசும் அரசியல்வாதிகளும் மத ஆக்கிரமிப்பினை செய்கிறார்கள். அதற்கு அவர்கள், இனவாதம், மதவாதம் என்கிற மனித குலத்துக்கு எதிரான ஆயுதத்தை கையில் ஏந்தி நிற்கிறார்கள்.

மதவாதம், இனவாதம் போன்ற அடிப்படைவாத சிந்தனைகள் பலமுனை கொண்ட கத்திக்கு ஒப்பானது. அது எதிரியாக கருதுபவர்களை மாத்திரமல்ல, அதனை வீசுபவனையே வெட்டி வீழ்த்திவிடும். அதற்கு இலங்கை ஆகச்சிறந்த உதாரணமாகும். பிரித்தானிய பிடியில் இருந்து விடுதலை பெற்ற இலங்கையும், இன்றிருக்கும் இலங்கையும் மலைக்கும் மடுவுக்கும் அளவுக்கான வித்தியாசத்தை அனைத்து வழிகளிலும் கொண்டிருக்கின்றது. பொருளாதார பின்னடைவு மாத்திரமல்ல, கல்வி, சமூக ரீதியாகவும் மிகவும் பின்னோக்கிய பயணத்தில் இருக்கின்றது. நாட்டை விட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கை மாதாந்தம் இலட்சக்கணக்கில் அதிகரித்திருக்கின்றது. பல்கலைக்கழகங்களில் இருந்து விரிவுரையாளர்கள் கணிசமானளவு வெளியேறிவிட்டார்கள், சுகாதாரத்துறை வைத்தியர்கள் வெளியேற்றத்தினால் தள்ளாடுகின்றது. சுற்றுலாத்துறை ஊழியர்கள் இல்லாமையால் அல்லாடுகின்றது. இப்படி, நாட்டிலிருந்து தொழில் வல்லுனர்கள், புலமையாளர்களின் வெளியேற்றம் இந்த நாட்டின் உண்மையான நிலையைச் சொல்ல போதுமானாது. நாட்டிலிருந்து வெளியேற விருப்பமின்றி இருப்பவர்களின் தொகை மிக சொற்பமே. வெளியேறுவதற்கான பண வசதி வாய்ப்புக்கள் இல்லாத மக்கள்தான் அதிகம். அவர்களை இன்னும் இன்னும் நெருக்கடிக்குள் தள்ளும் வேலைகளைத்தான் இந்த இன,மதவாதிகள் நாளும் பொழுதும் முன்னெடுக்கிறார்கள்.

நாட்டிலுள்ள எந்தவொரு பகுதியிலும் ஒருவர் காணிகளை வாங்கி அங்கு குடியமர முடியும். பொன்னம்பலமோ, விக்னேஸ்வரனோ அல்லது சுமந்திரனோ வசிப்பது அவர்களின் சொந்த வீடுகளில். அவை, யாரிடமும் பிடுங்கி எடுக்கப்படவில்லை. மற்றவர்களின் உழைப்பை திருடி வாங்கப்பட்டதில்லை. அப்படிப்பட்ட நிலையில் தமிழ் அரசியல்வாதிகளின் வீடுகளின் முன்னால் போராடுவோம் என்று அறைகூவல் விடுப்பது எல்லாம் சுத்த இனவாதம் என்கிற ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை. ஏனெனில், தனியார் காணிகளிலும், சட்டத்துக்குப் புறம்பாகவும் அமைக்கப்படும் விகாரைகளும், கட்டுமானங்களுக்கும் எதிரான எந்தவொரு மனிதனும் போராட வேண்டும். அதுதான் அறம். அதனை விடுத்து, அந்த ஆக்கிரமிப்பை நியாயப்படுத்திக் கொண்டு, தமிழ்த்தலைவர்களின் வீடுகளின் முன்னால் நின்று இனவாதம் பேசுவது மனித மாண்பிற்கே அப்பாற்றப்பட்டதாகும்.

அப்படியான நிலையில், இனவாதத் தீயைக் கடந்து நாட்டில் அமைதியும் நிம்மதியுமான வாழ்வு என்பது யாருக்கும் எப்போதும் வாய்க்கப்போவதில்லை.

## கடிதங்கள்

### பாலத்தை புனரமைக்கவும்

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் தாழிறங்கி உள்ளமையால், இந்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகருக்குள் நுழையும் பிரதான வீதியான முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியின் முதன்மையான பாலமாக காணப்படும் வட்டுவாகல் பாலம், நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இது குறித்து, பல தடவைகள் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சுட்டிக்காட்டப்பட்டு, கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் எந்தவித நிரந்தரமான புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்புகள், பாதிப்புகள் என்பன சீர்செய்யப்பட்டு வருகின்ற நிலையில், தற்போது பாலத்தின் ஒருபகுதியில், வீதி தாழிறங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறு பாலத்தின் ஒரு பகுதி தாழிறங்கிக் காணப்படுவது, பாலம் பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது என்பதன் அறிகுறி என பாலத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

எனவே, குறித்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நீண்டகாலமாக, வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படாத நிலையில், தொடர்சியாக கடற்தொழிலாளர்கள், பொதுமக்கள் என்போர், இந்தப் பாலத்தை புனரமைக்க கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

செ. கீதாஞ்சன்



மதுரி தமிழ்மாறன்
தேசிய சட்ட ஆலோசகர்– இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு

திருநர்களை பாதுகாத்தல்:

# சுற்றறிக்கைக்கு அப்பாற் செல்லல்



இலங்கையில் தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர், திருநர்கள் மற்றும் இடையிலிங்க (LGBTI) நபர்கள் பெரும்பாலும் பாகுபாடு, துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாகிவருகின்றனர். கடந்த சில வருடங்களாக ஆய்வு அறிக்கைகள் LGBTI நபர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் முதன்மையான குற்றவாளிகளாக தொடர்ச்சியாக இலங்கை காவல்துறையை (பொலிஸ்) அடையாளப்படுத்தியுள்ளன. கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், இலங்கை பொலிஸ் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) ஆகிய இரண்டும் இவ்வுண்மையை ஒப்புக்கொண்டு நிலைமையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்துவரும் நிலைப்பாடு தென்படுகிறது.

### சமீபத்திய முன்னேற்றங்கள்

கடந்த 15 மார்ச் 2023 அன்று, திருநர்களைப் பாதுகாப்பதற்கான பொலிஸ் அதிகாரிகளுக்குரிய வழிகாட்டுதல்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது (HRCSL) மூன்று தேசிய மொழிகளிலும் அறிமுகப்படுத்தியது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தளப்பகுதி குறிப்பிடுவதற்கிணங்க, LGBTI நபர்களுடனான ஊடாடலின் போது அவர்களின் மனித உரிமைகளை பொலிஸ் நிலைநிறுத்துவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் குறித்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 12 வழிகாட்டுதல்கள் அடங்கிய குறித்த தொகுப்பானது 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட யோக்கியகர்த்தா விதிமுறைகளின் பகுப்பாக தோன்றுகிறது. இவை பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சம்பந்தமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தைப் பயன்படுத்தும் விதிமுறைகளின் தொகுப்பாகும். இதுவே இலங்கையில் உள்ள ஒரு தேசிய நிறுவனத்தால் யோக்கியகர்த்தா விதிமுறைகள் தொடர்பாக சான்றாதாரம் குறிப்பிடப்படும் முதல் தடவையாக இருக்கக்கூடும்.

குறித்த வழிகாட்டுதல்கள் திருநர்களின் கீழ்வரும் உரிமைகளில் கவனம் செலுத்துவதுடன், அவர்களுடன் பொலிஸ் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை மிக சுருக்கமாக விவரிக்கின்றன,:

### சட்டத்தின் முன் அங்கீகாரம்

சமத்துவம் மற்றும் பாகுபாடின்மை சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகை அல்லது தண்டனையிலிருந்தான சுதந்திரம், ஒருவரின் பாதுகாப்பு, தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக்காவலிருந்தான சுதந்திரம், அந்தரங்கத்துக்கான உரிமை, தடுப்புக்காவலில் இருக்கும்போது, மனிதாபிமானத்துடனான நடாத்துகை, குடும்ப வாழ்க்கை, திருநர் குழந்தையின் அதீத நலன், சட்ட அமுலாக்க அதிகார நிறுவனங்களுடனான அணுகல், கருத்து சுதந்திரம், ஒருங்கு சேருதல் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம்.

### LGBTI உரிமைகளை மேம்படுத்துதல்

மற்றொரு சமீபத்திய முன்னனேற்றமாக, கடந்த 2022 டிசம்பர் மாதம் பொலிஸ் மா அதிபர் (IGP), LGBTI நபர்கள் பொலிஸ் நிலையங்களில் அதிகாரிகளால் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்களுக்கு பொலிஸ் சார்பில் மன்னிப்பு கோரினார். அவர் அவ்வாறு மன்னிப்பு கோரியதைத் தொடர்ந்து, "திருநர்கள் மற்றும் பால்நிலை மாற்றத்திற்கு உட்பட்டவர்களுடனான கையாளுகையின் போது கருத்தில்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்" என்ற தலைப்பில் 27 டிசம்பர் 2022 திகதியிடப்பட்ட சுற்றறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தார். பொலிஸ் அதிகாரிகளுக்கான பயிற்சியொன்றில் பயிற்சியாளர் ஒருவர் LGBTI நபர்களைப் பற்றி இழிவுபடுத்தும் வகையிலான கருத்துகளை வெளியிட்டதன் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சட்ட வழக்கிற்கான நேரடியான பதிலாக குறித்த சுற்றறிக்கையானது அமையும் என்று சுற்றறிக்கை சுட்டிக்காட்டுகிறது. குறித்த வழக்கில் மனுதாரர்கள், LGBTI தனிநபர்களின் அடிப்படை உரிமைகளை ஒடுக்கும் மற்றும் மீறும் வகையிலான பயிற்சிகள் அல்லது விரிவுரைகளை பொலிஸ் நடாத்துவதை தடுக்கும் தடையீட்டு நீதிப்பேராணை உத்தரவைக் கோரி வழக்கினை தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கானது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொலிஸ் மா அதிபர் சார்பில் ஆஜரான சட்டமா அதிபர், LGBTI நபர்களுடனான கையாளுகையின்போது பொலிஸ் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று கூறியிருந்தார். இந்த வழக்கு கடந்த 2023 ஜனவரி மாதம் முடிவுக்கு வந்தது.

2022 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், திருநர்களால் பொலிஸுக்கு அளிக்கப்படும் முறைப்பாடுகளை சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகத் தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும், குறித்த விடயத்திற்கு பொறுப்பான அதிகாரி, பிரதி பொலிஸ்மா அதிபரிடம் (DIG) அல்லது குறித்த பிரிவின் இயக்குனருடன் அறிவுறுத்தல்களைப் பெற்று செயற்பட வேண்டும் என்றும் விசாரணை முடிந்ததும் இறுதி விசாரணை அறிக்கையினை மேற்படி பிரிவின் பணிப்பாளர், சட்டப் பிரிவின் இயக்குநருக்கு அனுப்பி வைப்பார். மேலும், பால்நிலை உறுதிப்படுத்துகைக்கு உட்படுத்தப்பட்ட திருநர்கள் தகுந்த விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டால், அந்த நபருக்கு பொருத்தமானதாகக் கருதப்படும் ஒரு பெண் பாதுகாவலர் அல்லது பெண் அதிகாரியின் காவலில் இருப்பார் என்றும் சுற்றறிக்கை குறிப்பிடுகிறது. பொலிஸ் பயிற்சிகளில் திருநர்களை பாகுபாட்டிற்குட்படுத்தும் அல்லது ஒடுக்கும் வகையிலான கருத்துக்கள் அல்லது அறிக்கைகள் அனுமதிக்கப்படக் கூடாது என்றும், "முறையான முறைப்பாடு ஏதும் இல்லாமல்" அல்லது "நியாயமான காரணங்களுக்காகவன்றி" "குத அல்லது யோனி பரிசோதனைகள்" மேற்கொள்ளப்படுவது அனுமதிக்கப்படக்கூடாது என்றும் குறித்த சுற்றறிக்கை குறிப்பிடுகிறது. மேலும், திருநர்களாக அடையாளம் காணத்தவறினால், குற்ற நோக்கத்தை வெளிப்படுத்தாதவரை, அவர்களின் திருநர் அடையாளத்தைப் பற்றி பொலிஸிடம் தெரிவிக்காத நபர்கள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று சுற்றறிக்கை மேலும் குறிப்பிடுகின்றது. ஆணுறை உள்ளிட்ட கருத்தடை சாதனங்களை கைவசம் வைத்திருப்பது குற்றமல்ல என்றும், அத்தகைய சூழ்நிலையில், அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் (வரலாற்று ரீதியாக LGBTI நபர்களைக் கைது செய்ய/தடுப்புக்காவலில் வைக்க பயன்படுத்தப்பட்டது) அல்லது வேறு எந்தச் சட்டமும் பொருந்தாது என்றும் சுற்றறிக்கை திட்டவட்டமாக குறிப்பிடுகிறது.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 399 இன் சில விளக்கங்களுக்கு இந்த சுற்றறிக்கை பொருத்தமானதாகத் தோன்றுகிறது, அது "ஆள்மாறாட்டம் மூலமான ஏமாற்றுதல்" குற்றமாகும் என குறிப்பிடுகிறது, மேலும் இந்த குற்றம் நிரூபிக்கப்பட்டால், மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். குறித்த பிரிவு "ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்" என்பதனை வேறொரு நபரைப் போல் பாசாங்கு செய்தல், அல்லது தெரிந்தே ஒரு நபரை இன்னொருவருக்கு மாற்றீடாக்குதல் மூலம், அல்லது உண்மையான நபரை தவிர அந்த நபர் தவிர்த்து வேறு ஒருவர குறித்த நபராதல்" என வரையறுக்கிறது.

"ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்" என்பது மோசடி நோக்கங்களுடன் ஆள்மாறாட்டம் மேற்கொள்ளப்படும் சூழ்நிலைகளுக்கு பொருந்தும் ஒன்று என தெளிவாக வரையறுப்பதோடு, மேலும் குறித்த பிரிவு திருநர்களுக்கும் அவர்களின் பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை வெளிப்பாட்டிற்கும் முற்றிலும் பொருந்தாத ஒன்று என தெளிவாகிறது. எவ்வாறாயினும், வருந்தத்தக்க வகையில், இந்த தண்டனைச் சட்டக்கோவை பிரிவின் இருப்பானது, பொலிஸ் அதிகாரிகள் மத்தியில், திருநர்கள் தங்கள் பால்நிலை அடையாளத்தை குற்றங்களைச் புரிவதற்காக "மாற்றியிருக்கிறார்கள்" என்ற நீண்டகால உண்மைக்கு புறம்பான நம்பிக்கைக்கு வழிவகுத்துள்ளதோடு "பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றதாக" அவர்கள் மீது வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் (1841) "அலைந்து திரியும் நபர்களுக்கெதிரான சட்ட ஏற்பாடுகள்" பொலிஸால், பால்நிலை விதிமுறைகளுக்கு இணங்காத தோற்றம் கொண்டவர்களை மிரட்டவும், மிரட்டி பணம் பறிக்கவும், தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்தச் சட்டம் "கண்ணியத்தை" ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டமாக செயல்படுகிறது, அதாவது 'ஒழுங்கற்ற முறையில்' நடந்துகொள்வது, 'அலைந்து திரிதல்', 'வெறுமனே இருப்பது', 'பாசாங்கின் கீழ் பிச்சை கோருவது அல்லது சேகரிப்பது', 'காயங்கள்,, தொழுநோய் அல்லது வெறுக்கத்தக்க நோய் போன்றவற்றினை வெளிக்காட்டிய முயற்சிகள்', 'வலிந்தழைத்தல்' அல்லது 'அநாகரீகமான செயல்கள்' ஆகியவற்றின் வெளிப்பாடு போன்ற ஒழுங்கற்ற சமூக நடத்தைகளை தண்டிக்கும் வகையில் செயற்படுத்தப்படுகிறது. இத்தகைய நடத்தையில் ஈடுபடுபவர்கள் 'கயவர்கள்,' 'போக்கிரிகள்' அல்லது 'திருத்த முடியாத கயவர்கள்' என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். 'திருத்த முடியாத முரடர்கள்' அவர்கள் செய்த 'குற்றத்திற்காக' தண்டனை மாத்திரமன்றி, அவர்களின் எதிர்கால நன்னடத்தைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் விடுதலைக்குப் பிறகு ஒரு வருடத்திற்குரிய பணப் பெறுமதியிலான பிணையையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, LGBTI நபர்களுக்கு எதிராக இந்த சட்டங்கள் எவ்வாறு பாரபட்சமாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி சுற்றறிக்கை எடுத்துக்காட்டவில்லை என்பதோடு இந்தப் போக்கை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# தீயில் நனையும் பூக்கள்



பாத்திமா சபா
இரண்டாம் வருடம்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

புதிய உலகை புதிதாய் பார்க்க ஓர் பூ பூக்கும் போது அதனை கொய்து தீயில் போட்டு எறிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது. ஆம் இப்படித்தான் இந்த பூமியில் பிறக்கும் ஒரு சில குழந்தைகளும் வறுமை என்னும் ஆயுதத்தை தானே ஏற்று பிறப்பதில்லை. தன் எதிர்காலம் அறியாமல் பிறக்கையில் ஏதோ விதி வந்து விளையாடுவது போல் பாதியிலே வாழ்க்கையும் போர்க்களமாய் மாறுகின்றது. இதற்கு காரணம் குடும்பமாக இருக்கலாம் சமூக சூழ்நிலையாக இருக்கலாம் அல்லது யுத்தங்களாக இருக்கலாம் மற்றும் அனர்த்தங்களாக கூட இருக்கலாம் . எண்ணாயிரம் பிரச்சினைகளை வாழ்வின் துவக்கத்திலேயே கண்டு வறுமை என்னும் போர்வையை அணிந்து தெரிந்தோ தெரியாமலோ சிறுவர் தொழிலாளர் என்ற வரையறைக்குள் உட்படுத்தப்படும் இப்படியான குழந்தைகள் உலகத்தின் ஒவ்வொரு இடத்திலும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

சிறுவர்கள் தொழிலாளர்களாக அமர்த்தப்படுவது உலகளாவிய பிரச்சினையாகவே உள்ளது. இது உலகளவில் மில்லியன் கணக்கான குழந்தைகளை தொடர்ந்து பாதிக்கின்றது. மேலும் அவர்களின் குழந்தைப்பருவம், கல்வி மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான வாய்ப்பினையும் இழக்க செய்கின்றது. இந்த சிக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகள் இருந்தபோதிலும், அவையனைத்தும் நடைமுறையில் கைகூடாமல் போவது தான் உண்மை .சர்வதேச தொழிலாளர் அமைப்பின் மதிப்பீட்டின்படி, 2021 ஆம் ஆண்டில், உலகளவில் சுமார் 152 மில்லியன் சிறுவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் சிறுவர்களை வைத்து விவசாயம், உற்பத்தி, சுரங்கம் மற்றும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் சிறுவர்கள் தொழிலாளர்களாக அமர்த்தப்படுவதற்கு பின்னால் உள்ள காரணங்களை நோக்கும் போது முதலாவதாக வறுமை முதன்மை காரணமாக உள்ளது. ஏனெனில் வாழ்க்கையின் தேவைகளை பூர்த்தி செய்ய போராடும் ஒரு சில குடும்பங்கள் பெரும்பாலும் வீட்டு வருமானத்திற்கு பங்களிக்க தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஆகிவிட்டது. அவ்வாறே தரமான கல்விக்கான அணுகல் இல்லாமை மற்றொரு முக்கியமான காரணியாகும்.

மேலும் பின்தங்கிய நாடுகளில் பல சிறுவர் தொழிலாளர்கள் சுரங்கங்கள், கட்டுமான தளங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற ஆபத்தான சூழலில் வேலை செய்கிறார்கள். அங்கு அவர்கள் விபத்துக்கள், காயங்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு கூட ஆளாகியுள்ளனர். அவர்கள் பெரும்பாலும் நீண்ட நேர வேலை, குறைந்த ஊதியம் மற்றும் உடல் அல்லது உளவியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள். குறிப்பாக நமது இலங்கை நாட்டில் கூட தற்காலத்தில் இந்நிலையில் எம்மால் அவதானிக்க கூடியதாக உள்ளது. இலங்கையில் கட்டாய கல்வி நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் இலங்கையில் உள்ள சிறுவர்களில் 90.1 சதவீதமான சிறுவர்கள் மாத்திரமே பாடசாலைக்கு செல்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் 2009 வரை பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தமானது, குழந்தைத் தொழிலாளர்களை அதிகப்படுத்துவதில் பங்கு வகித்தது.யுத்தத்தின் போது பல குழந்தைகள் அனாதைகளாக்கப்பட்டனர். மேலும் அவர்களது குடும்பங்களில் இருந்தும் பிரிக்கப்பட்டனர். பல்வேறு நேர்மையற்ற முதலாளிகளின் சுரண்டலுக்கு அவர்கள் ஆளாகின்றனர். குறிப்பாக இலங்கையில் சிறுவர் தொழிலாளர் பிரச்சினை என்பது வறுமை, தொழிலாளர் சட்டங்களின் பலவீனமான அமுலாக்கம், வரலாற்று மோதல்கள் மற்றும் கலாச்சார நெறிகள் ஆகியவற்றால் உந்தப்பட்ட ஒரு பன்முகப் பிரச்சினையாகவே உள்ளது .

இலங்கையில் குழந்தைத் தொழிலாளர்களை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் சட்ட நடவடிக்கைகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கல்விக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் குடும்பங்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற பலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கூட நடைமுறையில் அவை சில நேரங்களில் பயனற்றதாகவே உள்ளது. மேலும் சிறுவர்கள் தொழிலாளர்களாக அமர்த்தப்படுவது ஒரு பரவலான பிரச்சனையாகவே தொடர்கின்றது. இந்தச் சிக்கல் நிலையினை தீர்ப்பதற்கு, சட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், வறுமை மற்றும் கல்வி வாய்ப்புகள் இல்லாமை போன்ற சிறுவர் தொழிலாளர்களின் அடிப்படைக் காரணங்களைச் சமாளிக்கும் ஒரு விரிவான அணுகுமுறையும் தேவைப்படுகிறது.

அந்தவகையில் இலங்கையில் 2021 ஆண்டின் பின்னராக சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுக்கும் பொருட்டு பல இறுக்கமான சட்ட நடைமுறைகள் வழக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. முறையான கல்வி சார் உரிமைகள் பறிக்கப்படும் போது அது குறித்த சில சட்ட திட்டங்களை அமுல்படுத்துவதோடு பாடசாலைகள் ரீதியாக சிறுவர்களின் வரவு வீதங்களும் தற்காலத்தில் அதிகமாகவே கருத்திற் கொள்ளப்படுகின்றன. ஆனாலும் கொரோனா நோய் தொற்றுக்கு பின்னராக இலங்கை மட்டும் அல்லாமல் உலக நாடுகளிலும் சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. பாடசாலைள் மூடப்பட்டமை மற்றும் பொருளாதார நெருக்கடிகள், இப்படியான பல்வேறு காரணங்களால் வறுமையில் தள்ளாடும் ஒவ்வோர் குடும்பங்களும் உயிர்வாழ போராடுவதால் அதிகமான சிறுவர்களின் எதிர்காலம் தொழிலாளர் சந்தையில் தள்ளியுள்ளதை எங்களால் அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக சிறுவர் உழைப்பால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை நோக்கும் போது பேனாவை பிடிக்கும் வயதில் தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள் உடல் உள ரீதியான பிரச்சினைகளுக்கும் சமூக ரீதியான பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். உடலியல் ரீதியான பிரச்சினை என்று நோக்கும் போது சிறு வயதிலேயே அதிகமான சுமைகளை சுமப்பதினால் முதுகு வலி மற்றும் கை வலி,கூணல் இப்படியான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். உளவியல் ரீதியான பிரச்சினை என்று பார்த்தோமாயின் மனச்சோர்வு, பதற்றம்,மன ஏக்கம் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேலும் சிறுவர்களின் சுதந்திரம், அவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டிய தருணங்கள், குடும்பத்தோடு மகிழ்ச்சியாக கழிக்க வேண்டிய பொழுதுகள் மற்றும் சிறுபராயம் எல்லாம் தொழிலில் ஈடுபடும் போது பறிபோகின்றது. அவ்வாறே சிறுவர் உழைப்பின் ஊடாக அந்தச் சிறுவர்கள் மோசமான ஊதியத்தை பெறும் வேலைக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.இதனால் இப்படியான சிறுவர்கள் சட்ட விரோதமான செயற்பாடுகள் கொள்ளை, கொலை, ஏமாற்றம் மற்றும் மதுப்பழக்கம் ஆகிய செயற்பாடுகளிலும் தன்னை அறியாமலேயே ஈடுபடுகின்றனர்.அதேவேளை சிறுவர்களுக்கு முறையான ஆரோக்கியமான உணவுகள் கிடைக்கப்பெறாமையினால் ஊட்டச்சத்து குறைப்பாட்டுக்கும் ஆளாகின்றனர்.

எனவே இந்த சிறுவர் தொழிலாளர்களை ஒழிப்பதற்கான சட்டத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் கூட அவற்றினை நடைமுறையில் தொடர்ந்தும் கருத்திற் கொண்டு பின்பற்றுவது மிகவும் அவசியமாகும். இதற்கு ஒவ்வொரு நாட்டினுடைய அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட்டு சிறுவர் தொழிலாளர் குறித்த உயரிய கரிசனை காட்டுவது அவசியமாகும்.மேலும் ஒவ்வொரு சிறுவர்களும் அபாயகரமான வேலையில் இருந்து அகற்றப்படுவது மட்டுமல்லாமல், கல்வியைப் பெறுவதற்கும் ஒளிமயமான எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்பளிப்பதை உறுதிசெய்வது முக்கியமாகும் .

அமெரிக்கா

# ஒசாமாவை சுட்டவர் கைது

பயங்கரவாதி ஒசாமா பின் லேடனை சுட்டுக் கொன்ற அமெரிக்க நேவி சீல் படையை சேர்ந்த வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்

அமெரிக்காவின் நேவி சீல் படை பிரிவினர் பாகிஸ்தானில் நடத்திய அதிரடி தேடுதல் வேட்டையின்போது 2011-இல் பின் லேடன் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை ராபர்ட் ஓ நெய்ல் என்ற வீரர் சுட்டுக் கொன்றதாக தகவல்கள் வெளிவந்தன. இந்நிலையில் இந்த ராபர்ட் மீது அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அடிதடி வழக்கு ஒன்றில் ராபர்ட் கைதாகியுள்ளார். அவர் மீது பொது சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல், உடல் காயத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைதை தொடர்ந்து 3500 அமெரிக்க டொலர் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். பின்லேடனை கொன்றது குறித்து 2017-இல் ராபர்ட் ஓ நெய்ல் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார். இந்த தகவலை அமெரிக்க அரசு மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

## திருமணம் செய்யும் பெண்களுக்கு பரிசு

சரியான வயதில் விரைந்து திருமணம் செய்துகொள்ளுமாறு பெண்களுக்கு பணப்பரிசு வழங்கி, அரசே ஊக்குவிக்கும் நடைமுறையை சீனாவில் தொடங்கி இருக்கிறார்கள்.

உலகளவில் அதிக மக்கள்தொகை கொண்டதாக திகழ்ந்த தேசம் சீனா. மக்கள்தொகையை குறைக்கும் முயற்சியில், தம்பதியர் ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்ளலாம் என்றெல்லாம் கட்டுப்பாடு விதித்த சீனா, இன்று அடியோடு மாறிப்போயிருக்கிறது. மக்கள்தொகையில் நம்பர்.1 இடத்தை இந்தியாவிடம் பறிகொடுத்தது மட்டுமன்றி, கடந்த அரை நூற்றாண்டில் சீனா காணாத வரலாறாக அங்கே குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துள்ளது.



திருமணம் ஆனால்தானே குழந்தை? திருமணத்துக்கு எதிராக சீனர்கள் மத்தியிலான அதிருப்தி அதிகரித்ததில், அவற்றைப் போக்கும் நடைமுறைகளை சீனா தொடங்கியிருக்கிறது. குழந்தை வளர்ப்பு, பராமரிப்பு, கல்வி என குழந்தையை மையமாகக் கொண்ட செலவினங்கள் அதிகரித்ததன் காரணமாக, குழந்தை பிறப்பு விகிதம் அங்கே வெகுவாக சரிவு கண்டுள்ளது. இதனையடுத்தே மேற்கண்டவாறு அறிவித்துள்ளது,

ஸ்பெயின்

## உதட்டு முத்தத்தில் சிக்கியவரின் தாய் உண்ணாவிரதம்

ஸ்பெயின் கால்பந்து சங்க தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸின் தாயார், உண்ணாவிரதத்தின் இரண்டாம் நாளில் நீதிக்காக இறப்பேன் என சபதம் செய்துள்ளார்.

சிட்னியில் நடந்த மகளிர் உலகக்கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில், ஸ்பெயின் வெற்றி பெற்று முதல் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது. கோப்பையை வென்ற தமது அணி வீராங்கனைகளுக்கு ஸ்பெயின் கால்பந்து சங்க தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ் கட்டியணைத்து பாராட்டு தெரிவித்தார். அப்போது அவர் ஜென்னி ஹெர்மோசோவின் உதட்டில் முத்தமிட்டது பெரும் சர்ச்சையாக வெடித்தது.



அதனைத் தொடர்ந்து அவர் மீது கண்டனங்கள் எழுந்ததைத் தொடர்ந்து லூயிஸ் ரூபியேல்ஸ் இடைநீக்கம் செய்யப்பட்டார். ஆனால் அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய மறுத்து விட்டதால், ஸ்பெயினின் மகளிர் பயிற்சியாளர்கள் மொத்தமாக ராஜினாமா செய்தனர். இந்நிலையில், லூயிஸ் ரூபியேல்ஸின் தாயார் ஏஞ்சல்ஸ் பெஜார் (72) தனது மகனுக்கு நீதி கிடைக்க வேண்டும், அவர் குற்றமற்றவர் எனக் கூறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற சிகையலங்கார நிபுணரான ஏஞ்சல்ஸ் பெஜார், தேவாலயத்திற்குள் இருப்பதாக அறிக்கைகள் கூறும் நிலையில், அவர் திரவ உணவுகளை மட்டுமே எடுத்துக் கொள்வதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியா

## வீட்டு கூரை மீதிருந்து தாவிய ராட்சத பாம்பு

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லேண்ட் மாகாணத்தின் புறநகர் மற்றும் கிராமப்பகுதிகளில், குளிர் காலங்களில் மலைப்பாம்புகள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவது வாடிக்கை. அதிலும் குடியிருப்பு பகுதிகளில் சர்வ சாதாரணமாக 10 அடி நீளமுள்ள மலைப்பாம்புகள் கூட சுற்றித்திரிவது அம்மகளுக்கு பழக்கப்பட்ட ஒன்று.

இந்நிலையில், குயின்ஸ்லேண்ட் மாகாணத்தின் கிராமப்பகுதி ஒன்றில் வீட்டின் கூரை மீதிருந்து 16 அடி நீளமுள்ள ராட்சத மலைப்பாம்பு ஒன்று, மரத்திற்கு மரம் தாவி சென்றது. இந்த சில்லிட வைக்கும் காட்சியை கண்ட அந்த பகுதி மக்கள் தங்கள் செல்போனில் படம் பிடித்தனர்.



இந்த காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வனவிலங்கு ஆர்வலர்கள், கார்பெட் வகை மலைப்பாம்புகள் மரத்தின் மீது ஏறுவது சாதாரண விஷயம் தான் என்கின்றனர். சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் ஒரு வீட்டு கழிவறையின் கூரையின் மீது மலைப்பாம்பு இருந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

உத்தரப்பிரதேசம்

## அத்துமீறிய ஆடுகளால் அந்தரங்க உறுப்பை கடித்து குதறிய நபர்

தனக்கு சொந்தமான பொருட்களை பக்கத்து வீட்டுக்காரரின் ஆடுகள் சேதப்படுத்தியதால் ஆடுகளின் உரிமையாளரின் அந்தரங்க உறுப்பை பாதிக்கப்பட்ட நபர் கடித்து குதறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிம் ஷாஜகான்பூரை சேர்ந்தவர் கங்காராம். இவரது பக்கத்து வீட்டை சேர்ந்த ஒருவர் ஆடுகள் வளர்த்து வருகிறார். இவை அவ்வப்போது கங்காராமின் வீட்டிற்குள் நுழைந்து பொருட்களை சேதப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் , வீட்டிற்குள் நுழைந்த ஆடுகள் விலை மதிப்புள்ள பொருட்களை சேதப்படுத்தியதாக தெரிகிறது.



இதனால் ஆத்திரம் அடைந்த கங்காராம், பக்கத்து வீட்டுக்காரரான அந்த ஆடுகளின் உரிமையாளரை சரமாரியாக தாக்கியுள்ளார். பின்னர் கீழே தள்ளி விட்டு அவரது அந்தரங்க உறுப்பை கடித்து குதறியுள்ளார். இதனால் ஏற்பட்ட வலியால் துடித்துப்போன ஆடுகளின் உரிமையாளர், மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் அவரை அக்கம் பக்கத்தினர் சேர்த்துள்ளனர். ஆடுகள் அத்துமீறியதால் அதன் உரிமையாளர் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி

## குழப்பும் குரங்குகளை பயமுறுத்த லாங்கூர் ஒலி

புதுடெல்லியில் ஜி 20 மாநாடு நடைபெற உள்ள நிலையில், குரங்குகள் அட்டகாசத்தைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

லுடியன்ஸ் பகுதியில் ஏராளமான குரங்குகள் உள்ளன. இந்த பகுதி பொதுமக்களை குரங்குகள் அடிக்கடி கடித்து வைக்கும் சம்பவம் நடைபெற்று வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வனத்துறையினர் செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ள ஜி 20 மாநாட்டிற்கு குரங்குகள் இடையூறு செய்யாதவாறு தடுப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளன.




இதற்காக பயிற்சி பெற்ற 30, 40 பேர் லாங்கூர் சத்தம் எழுப்பி குரங்குகளைப் பயமுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடங்களுக்கு அருகில் இவர்கள் நிறுத்தப்படுவார்கள்.

ஆசியக் கிண்ணத்துக்கான

# இலங்கைக் குழாமில் ஹஸரங்க, சமீர, குமார இல்லை

ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கைக் குழாமில் காயம் காரணமாக துஷ்மந்த சமீர, டில்ஷான் மதுஷங்க, லஹிரு குமார, வனிடு ஹஸரங்க ஆகியோர் இடம்பெறவில்லை.

இவர்களுக்குப் பதிலாக பிரமோத் மதுஷன், பினுர பெர்ணாண்டோ, டுனித் வெல்லலாகே, துஷான் ஹேமந்த ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

தவிர காயத்திலிருந்து குணமடைந்த குசல் பெரேரா, இரண்டாண்டுகளுக்குப் பின்னர் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

குழாம்: தசுன் ஷானக (அணித்தலைவர்), பதும் நிஸங்க, திமுத் கருணாரத்ன, குசல் பெரேரா, குசல் மென்டிஸ் (உப அணித்தலைவர்), சரித் அஸலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்கிரம, மகேஷ் தீக்ஷன, டுனித் வெல்லலாகே, மதீஷ பத்திரண, கசுன் ராஜித, துஷான் ஹேமந்த, பினுர பெர்ணாண்டோ, பிரமோத் மதுஷன்.




டயலொக் பாடசாலைகள் றக்பி விலகல் முறையிலான தொடர்:

## அரையிறுதியில் சென். பீற்றர்ஸ்

Dialog SCHOOLS RUGBY KNOCKOUTS

டயலொக் பாடசாலைகள் றக்பி விலகல் முறையிலான தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சென். பீற்றர்ஸ் கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

ஹவ்லொக் பார்க்கில் அண்மையில் நடைபெற்ற திருத்துவக் கல்லூரியுடனான நான்காவது காலிறுதிப் போட்டியில் 25-13 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்கு சென். பீற்றர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

## சம்மாந்துறை பாடசாலை மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட பின்தங்கிய பிரதேசமான நெய்னாகாடு அல் அக்ஸா வித்தியாலய மாணவிகள் இருவர் கிழக்கு மாகாண-மட்ட விளையாட்டுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை, நெய்னாகாடு அல் அக்ஸா வித்தியாலய மாணவி பாத்திமா றினா என்ற மாணவி 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 60 மீற்றர், 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும், மாணவி யூ.எல். எப். சீபா 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் பெற்று கிழக்கு-மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.



தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவிகளுக்கும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.எல்.எம் மாஹிர் தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்ததுடன் அவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார் .

## இங்கிலாந்து செல்லும் அன்சு பாட்டி?




ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான அன்சு பார்ட்டியைக் கைச்சாத்திடுவதற்கான போட்டியில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியுடன் போட்டியில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் இணைந்துள்ளது.




வாலிப கிண்ணத் தொடரின் ஆரம்பப் போட்டியில்

## அராலி பாரதியை வீழ்த்திய நாவாந்துறை சென். மேரிஸ்

அஸ்ஹர் இப்றாஹிம்

யாழ்ப்பாணம் இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட வாலிப கிண்ணமாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆரம்பப் போட்டியானது இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக அண்மையில் ஆரம்பமாகியது.

இதில், பாரதியை 8-0 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் வீழ்த்தியது. மேரிஸ் சார்பாக நிதர்சன் 3 கோல்களையும், ஜூட் 2 கோல்களையும், யொனிஸ்வரன், தங்கன், நியூராஜ் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக நாவாந்துறை ஜூட் தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 31 ஒகஸ்ட் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.